## முதன்மை மாவட்ட நீதிமன்றம், புதுக்கோட்டை

அ.வ.எண்.39/2018

பிரதிவாதி தரப்பு 1வது சாட்சி மீனாட்சி என்பவரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திருமதி. கங்காலெட்சுமி, கிரேடு-1 பெஞ்ச் க்ளார்க் என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி. மீனாட்சி | வயது | : | 24/26 |
| கணவர் பெயர் | : | ரமணா | தாலுகா | : | புதுக்கோட்டை |
| கிராமம் | : | மேட்டுப்பட்டி | தொழில் | : | வீட்டு குடித்தனம் |

நாள்-20.01.2026

பி.வா.சா.1

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1) நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். வழக்கு தாக்கல் செய்யும்போது, தாவா சொத்து எனது அப்பா பெயரில் இருந்தது.

2) பட்டா, சிட்டா ஆகியவற்றை நான் பார்க்கவில்லை. ஆனால் எனது தகப்பனார் பெயரில் இருப்பதாக சொன்னார்கள். பட்டா, சிட்டா எனது தகப்பனார் பெயரில் இல்லை என்றாலும், எனது பாட்டி பெயரில்தான் உள்ளது என்றாலும் சரியல்ல.

3) நான் முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மையானதுதான். முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தின் பத்தி-5ல், நான் எனது தகப்பனாரை பற்றி சொல்லியுள்ள விசயங்கள் அனைத்தும் உண்மையானதுதான்.

4) எனது தகப்பனாரை பற்றி நான் சொல்லியுள்ள குற்றச்சாட்டுக்கள் தவறானவை என்றால் சரியல்ல. எனது தகப்பனாருக்கு எதிராக நானோ, எனது தாயாரோ, 2ம் பிரதிவாதியோ எந்த புகாரும் காவல் நிலையத்தில் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

5) உண்மையிலேயே எனது தகப்பனார் அந்த தவறை செய்திருந்தால், நாங்கள் அறிவிப்பு அனுப்பியிருப்போம் என்றாலும், சட்டப்படி நடவடிக்கை எடுத்திருப்போம் என்றாலும், அவர் இறந்துவிட்டதால் உண்மைக்கு மாறாக அவர்மீது பொய்யான குற்றச்சாட்டுக்கள் சொல்கிறோம் என்றால் சரியல்ல.

6) தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் எனக்கு தெரியாது.

7) தாவா சொத்தில் 1 மாடி வீடு, 3 கடைகள், இரண்டு ஓட்டு வீடுகள் ஆகியவை உள்ளது. அவைகள் எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்டது. மேற்படி கட்டிடங்களுக்கு யார் பெயரில் வரிவிதிப்பு உள்ளது என்றும், யார் வரி செலுத்துகிறார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். அனைத்தும் எனது தகப்பனார்தான் செலுத்துகிறார்.

மு.மா.நீ,

8) தாவா சொத்து எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்து இல்லை என்றாலும், எனது பாட்டிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றாலும், எனது தகப்பனார் இறந்துவிட்டதால் உண்மைக்கு மாறாக சொத்தில் உரிமை கோருகிறேன் என்று சொன்னால் சரியல்ல.

9)என்னுடைய சகோதரர் இறந்த தேதி எனக்கு தெரியாது. எனது சகோதரர் இறந்ததற்கு எவ்வளவு இழப்பீட்டு தொகை கொடுத்தார்கள் என்ற விபரத்தை எனது தகப்பனார் என்னிடம் சொல்லவில்லை. இழப்பீடு கிடைத்த விபரம் மட்டும்தான் தெரியும். எந்த தேதியில் கொடுத்தார்கள் என்று தெரியாது. அது சம்மந்தப்பட்ட ஆவணங்கள் எதுவும் என்னிடம் இல்லை.

10) எனது தந்தை இறக்கும் வரையில் நாங்கள் அவருடன் சேர்ந்து வாழவில்லை என்றால் சரியல்ல. எனது தந்தை உயிருடன் இருந்த காலம் வரையில் எனது பாட்டிதான் எனது தகப்பனாரை கவனித்து வந்தார் என்றாலும், நானோ, எனது தாயாரோ எனது தகப்பனாரை கவனிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

11) நானும், எனது தாயாரும் எனது தகப்பனாரைவிட்டு பிரிந்து சென்றுவிட்டோம் என்றாலும், அதனால்தான் எனது தகப்பனார் என் தாயாருக்கு எதிராக விவாகரத்து வழக்கு தாக்கல் செய்தார் என்று சொன்னாலும், இப்பொழுது உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

12) எனது தந்தையார் இறந்த பின்னர், எனது தாயார் மற்றும் நானும் அடியாட்களுடன் வந்து சொத்தின் ஒரு பகுதியை ஆக்கிரமித்துவிட்டோம் என்றால் சரியல்ல.

13) தாவா சொத்தில் வாதிக்கும் பங்கு உள்ளது என்றாலும், அதை நாங்கள் மறுக்க முடியாது என்றாலும் சரியல்ல.

**1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக வாய்தா வழங்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
புதுக்கோட்டை.